*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# மருதூர்க் கொத்தனின் சிறுகதைகளில் இன உறவு

**முகம்மது மூஸா ஜெஸ்மி**
ஆசிரியர், கமு/கமு/அல்-மனார் மத்திய கல்லூரி (தே.பா)
மருதமுனை.

Correspondence: jesmymmoosa@yahoo.com

## ஆய்வுச் சுருக்கம்

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் இன உறவைப் பிரதிபலிக்கும் சிறுகதை முயற்சிகள் காலகட்ட எழுத்தாளர்களால் மேற்கொள்ளப்பட்டே வந்திருக்கின்றன. 1960 களில் சிறுகதை இலக்கிய முயற்சிக்குள் தம்மை ஈடுபடுத்திய கொத்தன் உருவாக்கிய இலக்கியச் சூழல் இன உறவுப்பாலத்தை அவருள் அதிகம் விதைக்கத் தொடங்கியது. அவரது சிறுகதைகள் தொடர்பில் பல்கலைக்கழக உள்நிலைகளிலும் சஞ்சிகைகள் மற்றும் ஆய்வு மாநாடுகள் தரத்திலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அவரது சிறுகதைகளில் காணப்படும் இன உறவு பற்றியதான தனியான ஆய்வு முன்வைப்புக்கள் இடம்பெறவில்லை. கொத்தனது சிறுதைகளில் இடம்பெறுகின்ற இன உறவினை வெளிப்படுத்தும் அம்சங்கள், சிறுகதைகள் பற்றிய திறனாய்வுப் பார்வைகள் போன்றவைகளே இவ்வாய்வின் மூலகங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவைகளின் அடிப்படையில் கொத்தனது சிறுகதைகளினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள இன உறவுக் கருத்துக்களை நுணக்கமாகப் பரிசீலிக்கின்ற முயற்சியாகவே ஆய்வு அமைந்துள்ளது.

**பிரதான சொற்கள்:** மருதூர்க் கொத்தன், பாடுபொருள், இன உறவு

## 1. அறிமுகம்

1960கள் சிறுகதை இலக்கிய வளர்நிலையில் முக்கியத்துவம்மிக்க காலகட்டமாகும். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றமும் அதன் நிழலில் எழுதத் தொடங்கிய அம்பாறை மாவட்ட முதன்மைச் சிறுகதையாளர்களும் ஒன்றிணைந்து பணியாற்றிய காலமாக இதனைக் கொள்ள முடியும். அ.ஸ. அப்துஸ்ஸமது, நீலாவணணன் ஆகியோரும் அவர்களைத் தொடர்ந்து உருவான மருதூர்க்கொத்தன், ஜீவாஜீவரெட்ணம், மருதூர்க்கனி, மு.சடாச்சரன், எம்.ஏ.நு.ஃமான் உள்ளிட்டோரின் இணைவுகளும்: 1962 இல் கல்முனை எழுத்தாளர் சங்கம் உருவாகியமை என எல்லாமே கல்முனைப் பிரதேச எழுத்தாளர்களிடம் இன உறவை உண்டுபண்ணியது. நீலாவணை கோயில் வளவில் இருந்து நீலாவணனுடன் ஆரம்பமான பயணம் சிறுகதையின் பல்வேறு கோணங்களில் இன உறவைப் பேசவைக்கத் தூண்டியது. இம்முயற்சியில் கல்முனைப் பிரதேச எழுத்தாளர்கள் பலர் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட போதிலும் அதில் அதிக அக்கறை காட்டிய ஒருவராக கொத்தனை இனங்காட்ட முடியும்.

கொத்தனின் வாழ்விடம் மருதமுனை. அது மட்டக்களப்பு--அம்பாறை மாவட்டத்தின் எல்லைக் கிராமமாகும். பஞ்ச பாண்டவர் வரலாறு கூறும் பாண்டிருப்பு என்னும் தமிழ்க் கிராமத்தையும் மட்டக்களப்பின் ஆரம்பக் கிராமமான பெரியநீலாவணை தமிழ்க் கிராமத்தையும் இருபக்கமாகக் கொண்டு மத்தியில் இருக்கும் ஒரே முஸ்லிம் கிராமமாகும். இக்கிராம மக்களோடு அயல் கிராமத்தவர்கள் அரசியல், கல்வி மற்றும் தொழில் ரீதியிலும் சகோதர உறவுகளை வளர்த்தே வந்துள்ளனர்.

அரசியல், கல்வி, வியாபாரம், குடும்ப உறவுகள், பெயர் வைத்துக்கொண்ட முறைமை, பண்பாடுகளுடன் கலத்தல் என எல்லாவற்றிலும் அயல் கிராமங்களுக்கான உறவுப் பாலமாக மருதமுனை இருந்து வந்துள்ளது. இதனாலேயே ‘பிட்டும் தேங்காய்ப்பூ’வும் என்ற மகுடம் மருதமுனை மக்களுக்கென்றே நிலைத்துப் போன உறவு வாக்கியமாகத் தொடர்கின்றது. இவ்வாறான

பின்னணியில் மருதூரக் கொத்தன் வாழ்ந்து, தொழில் நிமித்தம் கலந்திட்ட சூழலியல் தாக்கமும் அன்றைய கால கட்ட இன உறவுச் சூழலுமே இத்தன்மை மிக்க சிறுகதையாக்கத்திற்கு கொத்தனை அழைத்துச் சென்றிருக்கின்றதெனலாம். இதுபற்றி ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இக் ஆய்வின் நோக்கமாகும்.

## 2. மருதூர்க் கொத்தன் கதைகளில் இன உறவு:

மருதமுனைப் பிரதேச பொருளாதாரம் ஈட்டலில் முக்கிய பங்கு வகித்து வந்தவைகளுள் நெசவும் மீன்பிடியும் பிரதானமானவை. இரு தொழில்களினது இயங்கியலுக்குள் தமிழ் சகோதர கிராமத்தவர்களின் இணைவு தவிர்க்க முடியாததாகவே கருதப்பட்டது. இவற்றையெல்லாம் பதிவேற்றம் செய்வதற்காக எழுந்த கதையாக 'மரையாம் மொக்கு' என்ற சிறுகதையைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். காத்துமுத்து என்னும் மீனவத் தொழிலாளி தொழில் நிமித்தம் மருதமுனைக் கிராமத்துடன் கொண்ட உறவினை இக்கதையில் வெளிப்படுத்தியுள்ளார் கொத்தன்.

தொழில் ரீதியாக வரும்போது அவர்களிடையே உள்ள உறவுகளை எவராலும் குறைத்து மதிப்பிட முடியாது. காத்துமுத்துவை இளையவரான காதர் எவ்வாறு உறவு கொண்டு அழைப்பது என சங்கடப்படும் போது:

> "சோனகரைக் காக்கா என்று தமிழரும் தமிழரை அண்ணே என்று சோனகரும் இளம் வயதாய் இருந்தால் கூட அழைக்கின்ற மரபை விட்டுக் கொடுக்க முடியுமே?"(மருதூர்க் கொத்தன்,*1998*, களம்-*9: 39)*

என கதாசிரியர் கூறும்சமாதானம் உறவுகளுக்கு முத்தாய்ப்பாய் அமைந்து விடுவதனை அவதானிக்கலாம்.

மருதமுனையிலிருந்து சற்றுத் தொலைதூரத்திலுள்ள கிட்டங்கி ஆற்றுப்படுக்கையில் வலைவீச முடிவு செய்த காத்து முத்துவின் வலைப்பந்தை சைக்கிளில் கட்டிக்கொண்டு வந்து கொடுத்த இஸ்மாலெவ்வைக்கு அவன் கூலி கொடுத்தபோது இஸ்மாலெவ்வை நடந்து கொண்ட விதம் இப்படிக் காட்டப்படுகிறது:

> "இஸ்மாலெவ்வை சைக்கிளில் பெட்டிகட்டி ஒழுங்கை ஒழுங்கையாய் கூவி மீன்வித்து வயித்தக் கழுவுகிறான். தெய்வமாக வந்து உதவினான். கயிற்றுக் கடைக்காரன் தந்த கூலியின் அரைவாசியக் குடுக்கப் பார்த்தன். இல்ல ஒரு பத்து ரூபாயாவது எடுத்து தேத்தணி குடியெண்டன். சே...சே.. உனக்கு உதவிதான் செய்தன். அரிசக் கறிய வாங்கிற்றுப் போய் புள்ள குட்டியளோட வயிறாறத் தின்னு எண்டான்" (மருதூர்க் கொத்தன்,*1998*, களம்-*9: 41)*

தொழில், உழைப்பு, வாழ்வியல் போராட்டம் என்பவைகளுக்கு அப்பால் நின்று உறவுப் பேணலில் அம் மக்கள் காட்டும் ஆர்வம் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

அயல் கிராமத்திலுள்ள தமிழ் மாணவர்கள் வந்துபோவதற்கான போக்குவரத்து இலகும்: உறவுப் பாலமுள்ள சூழல் தன்மை கொண்டதுமாக மருதமுனை பிரதான வீதியில் அமைந்திருந்தது அல்-மனார் தேசிய பாடசாலை. அதனைத் தமிழ் மக்களும் பயன்படுத்திக் கொண்டனர்.

> "ஏழாம் வகுப்பில ஒரு பெண் கிணாட்ட ஊர்ப்பள்ளியில படிக்கிறாள். ஒன்பதில் ஒன்று மருதமுனையில் படிக்கிறாள்" (மருதூர்க் கொத்தன்,*1998*, களம்-*9: 39)*

எனக் கூறும் காத்து முத்துவின் மன வெளிப்பாட்டினூடாக அன்றைய கல்வி உறவு நிலையினை அறியலாம்.

மீனவத் தொழிலாளியான காத்து முத்து பேரன் உதயனை அழைத்துக் கொண்டு போகும் வழியில் மதியம் நெருங்கி விட்டது. பாங்கு சொல்லும் ஓசையினையே அவர்கள் நேரக் குறியாகக் கொள்வதாக ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

> "அல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர். மருதமுனையில் லொகறுக்கு வாங்கு பறியுது. ஸ்பீக்கர்ல வாங்கு சொல்லத் தொடங்கினதுக்குப் புறகு நேரம் அறியிறது லேசாப் போச்சி. மருதமுனை-நற்பிட்டிமுனை பள்ளிவாசல்களில் சொல்லுற வாங்குச் சத்தம் கேட்டுத்தானே என்ன அலுப்போடு கெடந்தாலும் வாரிச் சுருட்டி எழும்பி வேல வெட்டிக்குப் போகத் தோதுப்படுகுது" (மருதூர்க் கொத்தன்,1998, களம்-9: 43)

காத்து முத்துவின் இவ் வெளிப்படுத்துகை முஸ்லிம்களின் வாழ்வியலுடன் கலந்து விட்ட தமிழ் மக்களின் இன உறவை கட்டியங் கூறி நிற்கிறது.

இவைகளை சான்றுப்படுத்துவது போல் மருதூர்க் கொத்தன் குறித்த முருகபூபதியின் பார்வை இவ்வாறு அமைந்துள்ளது:

> "மருதூர்க் கொத்தனிடம் குடியிருந்த இன, மத நல்லிணக்க இயல்புகள்தான் அவரைத் தெளிவுடன் பிரச்சினைகளை அணுக செய்திருக்குமென நம்புகின்றேன். மருதமுனையின் வரலாறு என்ற பதிவில் அவரைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. மருதமுனை மண்ணை, எளியவரை, ஒடுக்கப்பட்டோரை ஜீவத்துடிப்புடன் தன் கதைகளில் பிரதிபலித்த கொத்தன் இன நல்லுறவுச் செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக் கொண்டார். தன் கதைகளிலும் சரி:தன் பேச்சிலும் சரி தமிழ் முஸ்லிம் இனநல்லுறவைப் பேணியவர் இவர். கல்முனை சமாதான அமைப்பினர் உடன் ,ணைந்து இன நல்லுறவைப்பேணும் செயற் பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஓர் அறிஞன் என்ற வகையில் இனப்பிரச்சினை காலங்களில் சமய நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தமிழ்-முஸ்லிம் இன உறவை வலுப்படுத்தினார்'' (முருகபூபதி,2014),Nolenadesan's Blog: 3,4)

முருகபூபதியின் இக் கூற்றானது கொத்தனது எழுத்துக்களில் இன உறவு எடுத்தாளப்பட்டமைக்கான வலுப்படுத்தலாகக் கொள்ளலாம். கல்வியினூடான மிக நீண்ட இனவுறவொன்று இப்பிரதேசத்தில் ஆழ ஊடுருவி உள்ளமையை அறிய முடிகிறது. இவ்வாறான உறவுப் பாலத்தை கூறவருகின்ற கதையாக 'சிரேஸ்டமான பகிடிவதை'யை அடையாளப்படுத்தலாம்..

மாறிவிட்ட தற்போதைய கல்விச் சூழல் ஒழுங்கிலும் இடமாற்றக் கொள்கையிலும் கல்வி: இனரீதியான பிரிகோட்டை உள்நிலையிலும் வெளிப்படையாகவும் தாக்கம் செலுத்தி வருகின்ற நிலையில் இவ்வாறான மீட்டுருவாக்கங்கள் எதிர்காலத் தேடல்களின் தீனிகளாகவும் அமைந்து விடக் கூடியன. இவ்வகையான கைங்கரிய மொன்றை "அடையாளப்படுத்தல்" என்ற நிலையிலாவது கதைகளுக்குள் கொண்டு வர எத்தனித்திருப்பது

> "கொத்தன் இன உறவு விரும்பி" என்ற பலரது கருத்துக்களுக்கும் வலுச்சேர்த்துள்ளன. "அல்லாஹ் அக்பர்....அதான் அழைப்பு... இனியும் படுக்கையில் புரள மனமில்லாமல் எழுந்தான். அஸ்-ஸலாத்து கைறுன் மினன் நௌம்-நித்திரையை விட தொழுகை நலமானது" (இஸ்மாயில்.வீ.எம்,2007),மருதூர்க் கொத்தன் கதைகள்: 135)

இவைகளைக் கேட்டு துயில் எழும்பியதாகக் கூறப்படும் இஸ்லாமியரான அதிபர்: அயல்கிராமமான பாண்டிருப்பு கிருஸ்ணன் கோயிலில் ஒலிக்கப்படும் ஸ்ரீ வெங் கடேச சுப்ரபாதத்தையும் செவிமடுக்கும் கைங்கரியத்தையும் கதையுடன் இணைத்து விடுகிறார்.

> " ஓ.....ம் கௌசெல்யா சுப்ராஜ ராம
>
> பூர்வ ஸந்த்யா ப்வர்த்ததே
>
> உத்திர்'ட நரசார் தூல
>
> கர்த்தவ்யம் தைவமாஹ்சிகம்!
>
> உத்தி'ஸ்டோத்திஸ்ட கோவிந்த…

விடியலுக்குக் கட்டியம் ஆரம்பமாயிற்று. பாண்டிருப்பு கிரு'ணன் கோயில் ஒலிபெருக்கி ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாத நாத வெள்ளத்தை விநியோகம் செய்ய ஆரம்பித்து விட்டது. ...ஓம் கௌசல்யா சுப்ரஜா ராம....ஆரம்ப ஒலி கேட்டதுமே வாரிச் சுருட்டி எழும்புவதை வழக்கமாகக் கொண்டவர்'' (இஸ்மாயில்.வீ.எம்,2007,மருதூர்க் கொத்தன் கதைகள்: *135)*

அதிகாலையில் மக்களைத் துயில் எழுப்புவதற்காக அவ்வேளையில் ஒலிக்கப்படுவதே சுப்ரபாதமாகும். பூபாளராகத்தில் ஓதப்படுவதே இம் மந்திரமாகும். கடவுளின் பெயர்கள் இதில் உச்சரிக்கப்படுகின்றன. 'தூங்குவதைவிட துயிலெழும்பி காரியங்களில் ஈடுபடுவதே மேல்' என்பதே இதன் தாற்பரியமாகும். முஸ்லிங்களின் அதிகாலை பாங்கிலும் இதே தாற்பரியமே உள்ளடங்கியுள்ளது. இரண்டினது ஒன்றிணைவுகளை உணர்ந்து: அதனை முஸ்லிம் பண்பாட்டுச் சூழலிலுள்ள கதாசிரியர் தொடர்புறுத்தி இருப்பது இனரீதியான சமய ஒத்திசைவொன்றை ஏற்படுத்த முனைந்திருக்கின்றமையினை ஊகித்து கொள்ளலாம். பக்திப்பாடல்களும் சமயக் கீதங்களும் அதிகரித்த போதிலும் சுப்ரபாதம் இந்து ஆலயங்களில் வழக்கொழிந்து வருகின்ற நிலையில் கொத்தனது இம் முயற்சியை மீட்டுருவாக்கக் கைங்கரியமாகவும் கொள்ள முடியும்.

கல்வியுடன் இணைந்த பல செய்திகளைக் கூறவந்த இன்னுமொரு கதையே ''சாய்ந்த கோபுரம்'' ஆகும். சிறுகதைப் பின்னலில் கதைக்களம் இடம் பெறும் நற்பிட்டிமுனைப் பிரதேசத்தையும் அதனை அண்மித்த பகுதிகளையும் அடையாளப்படுத்துவதனூடாக இனஉறவுக்கான அடித்தளமொன்று இடப்பட்டு இருந்ததனை கதாசிரியர் வரலாற்றுப்படுத்தியுள்ளார்.

> ''முஸ்லிம்களும் தமிழர்களும் சேர்ந்த வாழும் ஊர். ஒரு காலத்தில் தாங்கள் பெண் கொடுத்த குடிவழி முஸ்லிம் குடும்பங்களுடன் தமிழ்ப் போடிமார் இன்றும் ஆடிவரும் உறவாடல், பட்டிப்பளையின் கிளையாறு தென்னந்தமாய் அணைத்தோடும் அழகு….எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்க் குடி வள்ளல் ஒருவரால் வழங்கப்பட்ட நிலத்தில் அமைந்திருக்கும் பெண் பாடசாலை. அது தமிழ்க் குறிச்சிக்குள் அமைந் திருந்தும் அதை முஸ்லிம் பாடசாலையாக்க தமிழ்க் குடி மக்களும் அப்போதைய பட்டிருப்பு எம்.பி திரு.எஸ்.யூ. எதிர்மன சிங்கமும் ஒப்புதல் அளித்தது. இன மோதல் பிரதேசமெல்லாம் அரங்கேற நற்பிட்டிமுனையில் மாத்திரம் நிழல் காட்டவும் முடியாமல் போனது''(இஸ்மாயில்.வீ.எம்,2007),மருதூர்க் கொத்தன் கதைகள்: *176)*

குடிமுறைப் பரம்பல்: ஒன்றிணைந்த கல்விச் செயற்பாடு உள்ளிட்டவைகளினூடாக நற்பிட்டிமுனைக்கும் அயல் தமிழ்க் கிராமங்களுக்குமிடையில் இருந்த உறவை கதையில் கொத்தன் மிக நுணுக்கமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

மருதூர்க் கொத்தனை சாமான்யமான சிறுகதையாளர் என்று மட்டும் கூறிவிட முடியாது. அவர் வரலாற்றுச் சம்பவங்களையும் தன் ஆய்வுக்குட்பட்ட விடயங்களையும் அவதானிப்புக்களையும் பல்வேறு சிறுகதையினூடாகப் பதிவு செய்திருக்கிறார். அவ்விடயங்கள் அது தொடர்புடைய நூல்களில் ஆவணப்படுத்தப்பட்டிருப்பது கொத்தனது நிதர்சனமான எழுத்துக்குரிய சான்றுகளாகும்.

'சாய்ந்த கோபுரங்கள்' கதையில் சம்பவத்தொடராகக் கூறியுள்ளவைகளை நற்பிட்டிமுனைப் பிரதேசத்தின் வரலாற்று நூாலான 'நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாட்டியலும்' என்ற நூலில் எம்.எல்.ஏ. கையூம் ,வ்வாறு ஆதாரப்படுத்தியுள்ளார்.

> ''அம்மாநாச்சி குடி, உலவிப்போடி குடி, மூத்தநாட்சி குடி, இளையநாச்சி குடி போன்ற வழி முறைகளில் கூட முஸ்லிம்களும் தமிழர்களும் ஒருமித்தி ருந்தார்கள். நெற்பிட்டிமுனையில் *1910*ஆம் ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட பாடசாலை தற்போது அல்-அக்ஸா.ம.வி, சிவசக்தி.ம.வி ஆகிய இரண்டும் ஒன்றாகவே இருந்திருக்கின்றன. தமிழ், முஸ்லிம் கலவன் பாடசாலை என்னும் பெயரில் *1957*ஆம் ஆண்டு வரை ஒரே கிணற்றுநீர் பருகி கற்ற வரலாறு இன்னும் நினைவிருக்கிறது. *1957*க்குப் பின்னர்தான் அல்-அக்ஸாவும் சிவசக்தி வித்தியாலயமும் தனியாகியது. இதன் ஆரம்பகால அதிபர் ஒரு தமிழராகவே இருந்துள்ளார். இவைகள் தமிழரகளும், முஸ்லிம்களும் ஒற்றுமையின் உச்ச கட்டத்தில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது''(கையூம்,எம்.எல்.ஏ, *2016*,நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாடும்: *17)*

'எளிமை, உண்மை, சமநிலை--மருதூர்க் கொத்தன்' என்ற கட்டுரையில் சி.மௌனகுரு மருதூர்க் கொத்தனைப் பற்றிப் பதிவிடும் போது:

> "சாதி, மத, இன, வர்க்க பேதங்கள் இல்லாத ஒரு சமூகம் உருவாக வேண்டும் என்ற எல்லா நல்ல மனமுடையவர்களையும் போல அவரும் கனவு கண்டார். அதற்காகத் தன்னாலான அளவு மனசாட்சிக்கு விரோதமின்றி உழைத்தார்"(மௌனகுரு.சி,2004,.மருதூர்க் கொத்தன் நினைவை வாழ்தல்: 19)

என்கிறார். இக்கூற்று கொத்தனது எழுத்துப் போக்கு நிலையின் நகர்வினை அடையாளப்படுத்த விளைவதனைக் காணலாம்.

'மருதுர்ர்க் கொத்தன் கதைகள்' (1985) தொகுதியில் இடம்பெறும் 'சாதிகள் இரண்டே' சிறுகதை "புதுமை இலக்கியம்" மாத ,தழில் 1975 ஆம் ஆண்டு வெளிவந்தது. ஆக்கிரமிப்பு என்ற போர்வையில் தமிழ்-முஸ்லிம் இனங்களைச் சுரண்ட எத்தனித்த பேரினவாத முதலாளிகளுக்கு எதிராக ஒன்றிணைந்து வெற்றிபெறும் துணிச்சலை நிரூபிக்க இக்கதை பிரயத்தனம் எடுத்துள்ளது எனலாம். சகோதர இனங்களுடன் இணைந்து முஸ்லிம்கள் கொண்ட உறவுக்கு இக்கதை எடுத்துக்காட்டாகும்.

இன ஐக்கியம் சீர்குலைந்து போன கால கட்டத்தில் இனவாதத்தால் பாதிப்புறாத மக்களைப் பாத்திரங்களாகக் கொண்டது. எட்டுமாதக் கற்பிணியான சோமாவதிதான் கதையின் பிரதான பாத்திரம். தமது இலக்கினை அடைந்து கொள்ள அடியாட்களைப் பயன்படுத்திப் பழக்கப்பட்ட அப்புஹாமி முதலாளி: குடிகாரனான சோமாவதியின் கணவன் கிலுட்டுபாஸ்: கல்லுடைக்கும் அண்டை வீட்டுக் கந்தையன்: அவன் மனைவி வள்ளி நாயகி. கடைச் சிப்பந்தியான கரீம்: அவனது மனைவி கதீஜா, ஆட்டுக்கார ஜோன்பிள்ளை என இக் கதையில் வரும் பாத்திரங்கள் எல்லாமே இன ஐக்கியத்தின் பின்னலாக இடம்பெற்றுள்ளமை கதையின் சிறப்பம்சமாகும்.

> "மனிதர்கள் தனிச் சொத்துரிமை காரணமாக முதலாளி-தொழிலாளி அல்லது ஏழை-பணக்காரன் என்ற ,ருமுகாம்களில் பிரிந்து செயற்படுகின்றனர். அதில் சுயநல உறவு கொண்ட பணக்காரன் ஏழைகளுக்கு எதிராகத் திட்டமிட்டுச் செயற்படுகின்றான். ,ந்த அம்சத்தினை விபரிப்பதாகவே கொத்தனின் பாத்திரங்கள் அமைந்துள்ளன. எல்லா சமூகங்களையும் பிரதிபலிக்கின்ற பாத்திரங்களை ஒரே இடத்தில் சந்திப்பது யதார்த தத்திற்குப் புறம்பாக இருக்கலாம். இவை கொத்தனின் இலட்சியப் பாத்திரங்களாகவே இக்கதையில் வந்துள்ளன" (றமீஸ் அப்துல்லா,2012,அம்பாறை மாவட்டச் சிறுகதை ஆளுமைகள் : 66)

என்ற றமீஸ் அப்துல்லாவின் கூற்று இக்கதைப் பாத்திரங்கள் தொடர்பான உள்ளார்ந்த தேடலின் சாரமாக அமைகின்றன.

தமிழ்-முஸ்லிம்-சிங்கள மக்கள் ஒன்றிணைந்து வாழ்ந்த சூழலில் அவர்களிடையே முரண்பாடுகளை உருவாக்கி அதன் மூலம் தம் எண்ணங்களை அடையத் துணிந்தவர்களில் ஒருவராக அப்புஹாமி முதலாளியை வடிவமைத்துள்ளார் கொத்தன்

> "ஊருங்காலும் அடங்கிய பின் ஒரு போத்தல் கசிப்பையும் பருக வேண்டும். அது தரும் அதீத வெறியில் உத்வேகம் பெற்று தனது குடிசைக்கு அண்டையில் கிழக்குப் புறமாக உள்ள தமிழர்களதும் முஸ்லிம்களதும் குடிசைகளைக் கொழுத்த வேண்டும். காரியமானதும் அப்புஹாமி முதலாளி நூறுருபா அன்பளிப்புச் செய்வார்" (மருதூர்க் கொத்தன்,1985,மருதூர்க் கொத்தன் கதைகள்: 38)

> "சிங்கள மக்களின் மனதில் அவர் ஊன்றிய இனவாத வித்துக்கள் முளைத்துச் சடைத்துப் பயிராகியதும், அதை அறுவடை செய்து அனுபவிக்கக் காரணத்தோடுதான் கிலுட்டுப் பாஸை தேர்ந்தெடுத்தார்" (மருதூர்க் கொத்தன்,1985,மருதூர்க் கொத்தன் கதைகள்: 39)

இவ்வாறான ஆயத்தசூழலில் இருந்த அப்புஹாமி முதலாளியை இன ஒன்றிணைவால் தோல்வியடைச் செய்வதனூடாக தாம் எடுத்த கருவுக்கு வலிமை சேர்த்திருக்கிறார் கொத்தன்.

கொத்தனது சிந்தனையை செ. யோகராசா இவ்வாறு வலுப்படுத்துகிறார்:

> "இனவாதம் முகிழ்கத் தொடங்கிய வேளையில் மூவின மக்களிடையேயும் பேதங்களை உண்டாக்கும் முயற்சியில் ஈடுபட்ட அப்புஹாமி முதலாளி மூவின மக்களிடையிலான பிணைப்புக் காரணமாகத் தோல்வியெய்துவதைக் காட்டும் "சாதிகள் இரண்டே" நினைவு கூரத்தக்கது."(யோகராசா.செ,2011,சங்கத் தமிழ்,இதழ்:22)

அப்புஹாமி முதலாளி என்ற பாத்திரம் இனத்துவேசத்தை ஏற்படுத்த முனைந்த போதும் முதலாளியின் எடுபிடியான கிலுட்டுபாஸின் மனைவியின் உயிரைக்காப்பற்ற அயலவர்களான தமிழ்-முஸ்லிம் இணைவதுதான் கதையில் திருப்பத்தினையும் திருப்தியினையும் ஏற்படுத்தி விடுகின்றது.

> "எட்டுமாதக் கர்ப்பிணியான அவன் மனைவி சோமாவதி மயங்கிக்கிடந்தாள். அண்டை குடித்தனக்கார்களான கல்லுடைக்கும் தொழிலாளியான கந்தையனும் அவன் மனைவி வள்ளிநாயகியும் சோமாவதியின் உச்சியிலும் உள்ளங் காலிலும் சுக்குப் பொடியைத் தேய்த்தவண்ணம் இருந்தனர். கடைச் சிப்பந்தியான கரீமின் மனைவி கதீஜா இடுப்பளவு உயர மரக்குற்றியில் ஏற்றப்பட்டிருக்கும் அம்மிக்கல்லில் வேர்க்கொம்பைப் பொடியாக்கி கொண்டிருந்தாள்" (மருதூர்க் கொத்தன்,1985,மருதூர்க் கொத்தன் கதைகள்:40)

> "வள்ளி கதீஜாவுக்கு கட்டளை இட்டுவிட்டு சோமாவின் இமைகளைக் கசக்கினாள். கதீஜா அம்மியை வழித்து வேர்க்கொம்புப் பொடியை கந்தையனிடம் கொடுத்து விட்டு கரீமிடம் வேப்பெண்ணைச் சீசாவை வாங்கினாள். பின் குடிசைப் பக்கம் போனாள்"(மருதூர்க் கொத்தன்,1985,மருதூர்க் கொத்தன் கதைகள்:41)

மேற்சம்பவத்திற்கு மேலும் வலுவூட்டும் வகையில்:

> "பணக்காரச் சிங்கள முதலாளி ஒருவர் குடியேற்றக் கிராமத்தில் வாழும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக நிலம் என்ற போர்வையில் துவேசத்தை தூண்டி அவர்களைத் துரத்திவிட முனைவதும் மூன்று ,னத்திலுமுள்ள உழைக்கும் வர்க்கத்தினர் வாழ்க்கை முறையிலேயே பின்னிப் பிணைந்து ஒருவரின் துயரில் ஒருவர் பங்கு கொண்டு உறவு கலந்து வாழ்கின்ற முறையை இறுதியில் அவர்களிடையே கலக்கத்தை உண்டுபண்ணும் சக்தியையும் உணர்ந்து கொள்கின்றனர் என்பதையும் 'சாதிகள் இரண்டே' என்னும் சிறுகதை வலியுறுத்து கின்றது"(சடச்சரன்.மு,2000,தினகரன் வாரமஞ்சரி:4)

என்கின்ற மு.சடாச்சரத்தின் கூற்று அமைந்திருப்பது மனங்கொள்ளத்தக்கது.

இனவாதத்தைக் கிளப்பும் விதமாக ஆரம்பமான கதை முடிவில் 'கிலுட்ட பாஸ்' என்ற பாத்திரம் இனவாதத்தை கிள்ளி எறியும் விதமாக படைக்கப்பட்டிருப்பதும் கொத்தனின் சிறப்பம்சமாகும். இதன் மூலம் கொத்தன் தமது இலட்சியப் பணயத்தில் வெற்றியடைந்திருக்கிறார் என்றே குறிப்பிடலாம்.

> "கந்தையா இந்த உலகத்திலே ரெண்டு சாதிகள்தான் எண்டத்த இப்ப கண்ணாரக் கண்டிட்டான். ஒன்று பணக்காரச்சாதி. மற்றது என்னையும் உன்னையும் கரீமையும் போன்ற ஏழைச்சாதி என்று கூறியபடி கிலுட்டுபாஸ் கரிபடிந்த சாரத்தால் கண்களைத் துடைத்து விட்டான்"(மருதூர்க் கொத்தன்,1985,மருதூர்க் கொத்தன் கதைகள்:48)

கதையின் முடிவில் வரும் இப்பகுதியால் நாமும் ஆறுதலடையமல் இருக்க முடியாது.

இக் கதையின் சிறப்புத்தன்மை குறித்து சொல்லும் போது ராஜா ஸ்ரீகாந்தன் இப்படிக் கூறுகிறார்:

> "1975 ஆம் ஆண்டில் கொத்தன் எழுதிய 'சாதிகள் இரண்டே' என்ற சிறுகதை 'மருதூர்க் கொத்தன் கதைகள்' தொகுப்புக்கே மணி மகுடம் போன்றது" (ராஜா ஸ்ரீகாந்தன்,2021, மகுடம்: 15)

கொத்தன் 2004.04.21 இல் இறையடி சேர்ந்தார். அவர் மரணிப்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் ஜனவரி மாத 'ஓலை'யில் 'கோபுரமயில்' என்ற சிறுகதை வெளியானது. ஆயினும் தினகரன் பத்திரிகை அவர் இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் இக்கதையினை 'கலசம்' என்ற பெயரில் பிரசுரித்துள்ளது. எனினும் குறித்த கதையின் பிரதியோ வெளியான திட்டவட்டமான திகதியோ கொத்தனின் பாதுகாப்புக் கோர்ப்பில் இடம்பெறாமல் இருப்பது துரதிஸ்டவசமான சம்பவமாகும்.

இந்துக் கோவில்களின் உச்சியில் வைக்கப்படும் உறுப்புக்கு கோபுரக் கலசம் என்றே வழங்கப்படுவதனாலும் ,இரண்டும் தமிழர் பண்பாட்டினை உணர்த்துவதனாலும் கலசமும் கோபுரமயிலும் ஒரே அர்த்தத்தைத் தருகின்ற பெயர்களைத் தாங்கிய விடயமாகக் கொண்டு அப்பெயர்களை வைத்திருக்கலாம். எதுஎவ்வாறான போதிலும் கொத்தனின் இறுதிக்கதை இன உறவை வெளிப்படுத்துகின்ற கதையாக இடம்பெற்றுள்ளமை இன உறவுப் பிரியராக கொத்தன் இருந்துள்ளமைக்கான விசேட அம்சமாகும்.

சாரதா அம்மாள் ஒரு பட்டதாரி. பல்கலைக்கழகத்துக் காதல்: பணத்திற்காகப் பறி போனதன் பின்னர் கணவனை விட்டு தனிமையாக வாழும் தமிழ் பற்றாளர் சாரதா. முக்கிய நிகழ்வகளில் அழைக்கப்படும் பேச்சாளர். திருகோண மலையின் பிரபல்யமான கோயிலுக்குப் பக்கத்தில் வாழும் சாரதா இந்து மத பிரியர். இருந்தும் சகோதர முஸ்லிம் சமூகத்துடன் இன உறவோடு வாழ ஆசைப்படுபவர். தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பான நிகழ்வொன்றில் கலந்து கொள்ள முஸ்லிம் ஆசிரியை ஒருவரின் தலையை மறைக்கும் ஆடையான "ஸ்காப்பை" வாங்கி அணிந்து கொள்வதனை அடிப்படையாகக் கொண்டதே இக்கதையாகும்.

முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடை விடயத்தில் குறைப்புச் செய்வதற்கும் அதனைத் தடை செய்வதற்குமான அரசியல் ஏர்கோலங்களும் சூழ்நிலைச் சம்பவங்களும் அரங்கேற்றப்பட்டுக் கொண்டு வரும் இலங்கையில் தமிழ்ப்பண்பாட்டை முழுமையாகப் பின்பற்றும் சாரதா என்ற பெண் முஸ்லிம் பெண்களின் ஆடையினை அங்கீகரிப்பதாக அமையுமாறு இக் கதையினை கொத்தன் வடிவமைத்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆடைகளாலும் செயற்பாடுகளாலும் சமயங்களும் வழிபாடுகளும் குலைந்துவிடப் போவதில்லை. அது ஒவ்வொருவரினதும் உரிமைகளோடு சம்பந்தப்பட்டது. சௌகரியமானால் மாற்று சகோதர ஆடைகளை அணிவது குற்றமல்ல. அது இன உறவின் வெளிப்பாடே எனச் சுட்டிக் காட்டுவதே கோபுரமயிலாகும்.

> ".....தாயினும் நல்ல
>
> தலைவரென் றடியார்
>
> தம்மடி போற்றிசைப் பார்கள்
>
> வாயினும் மனத்தும்
>
> மருவிநின் றகலா.......
>
> பூசை அறையினுள் காலைநேரப் பூசையைப் பக்திப் பரவசத்தோடு செய்து தேவாரப் பாசுரங்களை பண்ணொடு பாடி, இறுதியாக திருநாவுக்கரசரின் திருவாவடுதுறை பக்தி செய்யுள் ஒன்றையும் திருஞானசம்பந்தரின் திருகோணமலை பக்திப் பாடலொன்றையும் பாடி முடித்துவிட்டு வெளியே வந்தாள் சாரதா..."*(செங்கதிரோன்,2004,ஓலை, இதழ்-22: 39)*

எனக் கதையினைக் கொத்தன் ஆரம்பிப்பதனூடாக சமய வழிபாட்டு ஈடுபாடுள்ளவராக சாரதா காட்டப்படுகிறாள்.

முஸ்லிம் பெண்களின் ஆடைக் கோலத்தை ஏற்றுக்கொண்ட சாரதா தமிழ்மொழி அமுலாக்கல் தொடர்பான கருத்தரங்கிற்கு 'ஸ்காப்' அணிந்துசெல்ல முடிவெடுக்கிறாள்.

> "ஜெஸ்மின் டீச்சர் கையிலிருந்த பொட்டலத்தை சாரதா அம்மாவிடம் கொடுத்தார். 'டீச்சர் இருங்கோ. நீங்க பார்த்து சரி சொன்னால்தான் நான் இன்றைக்கு விழாவுக்குப் போவேன்'

> சாரதா அம்மா பொட்டலத்துடன் தனது படுக்கைஅறைக்குச் சென்றாள். பொட்டலத்தை கட்டிலில் போட்டு விரித்தார். வெள்ளை, இளமஞ்சல், சந்தனம், தவிட்டு, கறுப்பு வர்ணங்களில் ஸ்காப்கள் ,ருந்தன. நிலைக்கண்ணாடியின் முன் நின்று ஒவ்வொன்றாக எடுத்து தலையில் அணிந்து கண்ணாடியைக் கூர்ந்து நோக்கினாள். தவிட்டு வர்ணம் அவருக்கு உவப்பாக ,ருந்தது. எதனையும் பார்க்கிற பார்வையால்தான் பொருள் துலக்கமாகின்றது என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். அதை அணிந்த முக்காட்டுக் கோலத்தில் மலர்ந்த முகத்தோடு அறையை விட்டு வெளியே வந்தார்.
>
> ‘அம்மா ரொம்ப அழகா ,ருக்கிறீங்க! என்ட கண்ணேபட்டிரும் போல இருக்கு’ என்று வேலைக்காரி செல்லம்மாள் மகிழ்ந்து கூறினாள்.
>
> ‘ரீச்சர் இந்த ஸ்காவுகள் ஒன்றையும் திருப்பித்தரமாட்டன். பணத்தைத் தருவேன்’ ‘ஐயையோ பணமா? உங்களிடமிருந்தா. இன்னும் வேணு மெண்டாலும் கொண்டாந்து தாறன்” (செங்கதிரோன்,2004,ஓலை, இதழ்-22: 42)

சமயப்பற்று நிறைந்த இந்துமதப் பெண்ணொருவரைக் கொண்டு முஸ்லிம் பெண்களின் தலைமறைக்கும் ஆடையினை(ஸ்காப்) ஏற்றுக்கொள்ள வைத்துள்ளதுடன் அதனை அவள் அணியும் வழக்கமுள்ளவளாக மாற்ற வைத்துக் கதையை நிறைவு செய்து கொண்டுள்ளதனூடாக இன ஐக்கியத்திற்கு சமயமோ அவர்களது ஆடைகளோ தடையல்ல என்பதைக் கொத்தன் விளக்க முயற்சித்துள்ளார்.

கலை இலக்கியத்தினூடாக இனங்களுக்கிடையே பரஸ்பர உறவுகளை உண்டு பண்ணும் நோக்கில் செயற்பட்ட குறிப்பிடத்தக்க வட்டத்துள் மருதூர்க் கொத்தனும் இணைந்து பங்களிப்புச் செய்ததாக அ. யேசுராசா “அலை” (26, ஐப்பசி: 1985) தழில் எழுதிய ‘தேசியவாதமும்’ என்ற பின்வரும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

> “‘தமிழ் பேசும் மக்கள்’ என்ற கருத்தாக்கத்தினுள் முஸ்லிம் மக்களும் முக்கியமானவர்களாய் உள்ளனர். மொழி இவர்களை தமிழ் மக்களுடன் பிணைக்கின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்கள் வாழும் நிலத்தினாலும் பண்பாட்டம்சங்களாலும் மேலும் பிணைப்புற்றிருக்கின்றனர். இந்த அந்நியோன்னியம் மிக நீண்டகாலமாகவே நிலவிவருகின்றது. இடையில் இந்த ஆண்டு சித்திரையில் (1985) அம்பாறை: மட்டக்களப்பு பிரதேசங்கள் சிலவற்றில் நிகழ்ந்த கலவரம் துரதிஸ்டவசமானது. பொறுப்புணர்வும் தூரதிருஸ்டியுமற்ற சில தமிழ் இளைஞர் குழுக்களின் செயற்பாடுகளை பிரித்து ஆளுதலில் கவனம் கொண்டுள்ள ஒடுக்கும் அரசினது கருவிகள் தந்திரத்துடனும் நுட்பத்துடனும் பயன்படுத்தியதாலேயே அவலமான அந்த நிகழ்வுகள் நடந்தேறின.
>
> தமக்கு முன்னால் உள்ள பொது ஆபத்தைக் கருத்திற் கொண்டு புரிந்துணர்வுடன் கூடிய ஐக்கியத்தை தம்முள் வளர்த்துக் கொள்ள வேண்டியதே. இரு சாராருக்கும் அத்தியவசியானது. பெரும்பான்மை சமூகமான தமிழ் மக்களுக்கு இதில் கூடிய பொறுப்புண்டு. தம்முள் சிறுபான்மையாய் வாழும் முஸ்லிம் மக்களின் மத, கலாசாரத் தனியுணர்வுகளுக்கு மதிப்பளித்து ஐயுறுவுகளை நீக்கும் வழிகளில் அவர்களே தீவிரமாய் முயல வேண்டும். கலை, இலக்கியங்கள் பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கக் கூடிய சாதனங்களாகும். இலங்கை முஸ்லிம்கள் நீண்ட காலமாகவே தமிழ்க் கலை இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றி இருக்கின்றனர். சமகாலத்தில் கூட முக்கிய இலக்கியப் பங்களிப்பை ஆற்றும் எம்.ஏ.நு.ஃமான், மருதூர்க் கொத்தன், எம்.எல்.எம்.மன்சூர், வேதாந்தி, பண்ணாமத்துக் கவிராயர் ஆகியோரையும் கணிப்பிற் கொள்ளத்தக்க இளைஞர் பலரையும் அது தன்னுள் கொண்டுள்ளது” (யேசுராசா.அ,2004,முனைப்பு:9)

இக் கூற்றிலிருந்து கொத்தனது எழுத்திலக்கிய செயற்பாடுகள் இன உறவை வளர்ப்பதில் பங்காற்றி இருக்கிறது என உறுதியாகக் கொள்ளலாம்.

வெவ்வேறு விடயங்களைக் கூறவந்த கொத்தனது சிறுகதைகளிலும்கூட பொருத்தமான விதத்தில், இனஉறவு சார்ந்த விடயங்களை மிகவும் பக்குவமாகவும் நேர்மையாகவும் முன் வைத்துள்ளமையினை அவதானிக்க முடிந்துள்ளது.

## 3. முடிவுரை

இவ்வாறாக நோக்கும் போது: ஈழத்துச் சிறுகதையாளர்களுள் அதிக கவனயீர்ப்பைப் பெற்றுள்ள மருதூர்க் கொத்தன் தமது சிறுகதைகளினூடாக இன உறவை விதைப்பதில் கூடிய அக்கறை காட்டியுள்ளார் என்றே குறிப்பிட முடியும். வாழ்விட அமைவு மற்றும் இலக்கிய உறவுகள் உள்ளிட்ட தாக்கங்களுடன் சிறுகதையின் பயன் வெளிப்படுத்துகையின் அங்கமாக இன உறவைக் கருதிய சிறுகதையாளராக கொத்தன் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். ஈழத்துச் சிறுகதையாளர்கள் பலர் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள போதிலும் கொத்தனின் வெளிப்படுத்துகை அறிவு பூர்வமான நியாயப்பாடுகளை நோக்கி நகர்வதனை அவதானிக்கலாம்.

## உசாத்துணைகள்

மருதூர்க் கொத்தன், (1998), “மரையாம் மொக்கு”, களம்-9-மே.

முருகபூபதி, (2014), ‘மண்வாசனையை பரவச் செய்த மருதூர்க் கொத்தன்’ Nolenadesan’s Blog.

இஸ்மாயில்.வீ.எம்,(2007), ’சிரேஸ்டமான பகிடிவதை’, மருதூர்க் கொத்தன் கதைகள்.

இஸ்மாயில்.வீ.எம், (2007), ’சாய்ந்த கோபுரம்’, மருதூர்க் கொத்தன் கதைகள்.

கையூம், எம்.எல்.ஏ (2016), நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாடும்.

மௌனகுரு, சி (2004), ‘எளிமை, உண்மை, சமநிலை மருதூர்க் கொத்தன்’, மருதூர்க் கொத்தன் நினைவை வாழ்தல்.

றமீஸ் அப்துல்லா, (2012), அம்பாறை மாவட்டச் சிறுகதை ஆளுமைகள்.

மருதூர்க் கொத்தன், (1985), ‘சாதிகள் இரண்டே’, மருதூர்க் கொத்தன் கதைகள்.

யோகராசா.செ,(2011),“மருதூர்க் கொத்தன் கதைகள்-ஒரு கண்ணோட்டம்”, சங்கத் தமிழ், இதழ்.

மருதூர்க் கொத்தன், (1985), ‘சாதிகள் இரண்டே’, மருதூர்க் கொத்தன் கதைகள்.

சடச்சரன்.மு,(2000),‘மருதூர்க் கொத்தன் காலத்தை வெல்லும் கதைகள்’, தினகரன் வாரமஞ்சரி.

மருதூர்க் கொத்தன், (1985), ‘சாதிகள் இரண்டே’, மருதூர்க் கொத்தன் கதைகள்.

ராஜா ஸ்ரீகாந்தன், (2021), “மருதூர்க் கொத்தன் கதைகள்”, மகுடம்.

செங்கதிரோன், (2004), ’கோபுரமயில்’, ஓலை, இதழ்-22.

யேசுராசா.அ, (2004), ‘தேசிய வாதமும்’, முனைப்பு, கலை இலக்கிய இதழ்-12.